# ஸ்ரீ குறிஞ்சி வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி

## காலாண்டு பொதுத்தேர்வு - 2024

## பத்தாம் வகுப்பு

## தமிழ்

மதிப்பெண்கள்: 100

நேரம்: 3:00 மணி

பதிவு எண்:

பகுதி - I (மதிப்பெண்கள்:15) 15 X 1 = 15

**குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**
**ii)கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. 'எந்தமிழ்நா' என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்
அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த+தமிழ்+நா இ) எம்+தமிழ்+நா ஈ) எந்தம்+தமிழ்+நா
2. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை
அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை
3. 'பெரிய மீசை' சிரித்தார் - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?
அ)பண்புத்தொகை ஆ)உவமைத்தொகை இ)அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை
4. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்
5. 'விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு'. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை -
அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து
இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து
6. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்
7. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப்போக்கர் கேட்டது .......... வினா.
"அதோ, அங்கே நிற்கும்." என்று மற்றொருவர் கூறியது ......... விடை.
அ) ஐயவினா, வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா, மறை விடை
இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை
8. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை" - என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?
அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்
9. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ............
அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்
10. மலர்கள் தரையில் நழுவும். எப்போது?
அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்
இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்
11. முல்லை நிலத்தின் பெரும்பொழுது ............
அ) கார்காலம் ஆ) குளிர்காலம் இ) கோடைக்காலம் ஈ) பனிக்காலம்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடையளிக்க.**

ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு நடுங்கிடும் வில்லாளோ
தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல் அன்றோ
ஏழமை வேட னிறந்தில னென்றெனை யேசாரோ.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்?
அ) கம்பராமாயணம் ஆ) சிலப்பதிகாரம் இ) மணிமேகலை ஈ) குண்டலகேசி
13. இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) கம்பர் ஆ) இளங்கோவடிகள் இ) பாரதியார் ஈ) திருத்தக்க தேவர்
14. திரை என்ற சொல்லின் பொருள்
அ) யானை ஆ) கடல் இ) அலை ஈ) படை
15. நெடும்படை - இலக்கணக்குறிப்பு தருக.
அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

**பகுதி - II (மதிப்பெண்கள்:18)**

**பிரிவு-1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க. 4 X 2 = 8**
**21-ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க.**

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
அ) பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் இலா.
ஆ) குறவர்கள் மலையில் கிழங்கு அகழ்ந்தனர்.
17. மாஅல் - பொருளும் இலக்கணக் குறிப்பும் தருக.
18. 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.
19. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.
20. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.
21. **"பொருள்" என முடியும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக.**

**பிரிவு-2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க. 5 X 2 = 10**

22. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக
அ) கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.
ஆ) பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.
23. பழமொழிகளை நிறைவு செய்க.
அ) உப்பிட்டவரை ______ ஆ) விருந்தும் ______
24. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
அ) இயற்கை - செயற்கை ஆ) விதி - வதி
25. பகுபத உறுப்பிலக்கணம் தருக: பதிந்து
26. கலைச்சொற்கள் தருக. அ) Space Technology ஆ) Emblem
27. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.
அ) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும் ஆ) கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.
28. தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்துகொண்டு தொடர்களை முழுமை செய்க.
அ) பசுமையான ______ ஐக் ______ கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி)
ஆ) பொதுவாழ்வில் ____ கூடாது. ____ இல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது.
(நடித்தல், நடிப்பு)



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**பகுதி - III (மதிப்பெண்கள்:18)**

**பிரிவு-1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.** **2 X 3 = 6**

29. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.' இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

30. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

31. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க,

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

அ) புவி உருவானபோது எப்படி இருந்தது?

ஆ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?

இ) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு தருக.

**பிரிவு-2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.** **2 X 3 = 6**

**34-ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க.**

32. சோலைக்(பூங்கா ) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொ ள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.

33. "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

34. **அடி பிறழாமல் எழுதுக.**

அ) "விருந்தினனாக ஒருவன்" எனத் தொடங்கும் காசிக்காண்டம் பாடலை எழுதுக.

**(அல்லது)**

ஆ) "தண்டலை மயில்க ளாட" எனத் தொடங்கும் கம்பராமாயணம் பாடலை எழுதுக.

**பிரிவு-3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.** **2 X 3 = 6**

35. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

36. உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

37. தற்குறிப்பேற்ற அணியை சான்றுடன் விளக்குக.

**பகுதி - IV (மதிப்பெண்கள்:25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **5 X 5 = 25**

38. அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

**(அல்லது)**

ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

39. அ) மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

**(அல்லது)**

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

**40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



41. நூலக உறுப்பினர் படிவத்தை எழுதுக.

42. அ) புயலின்போது நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக

**(அல்லது)**

ஆ) மொழிபெயர்க்கவும்

1. If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart – Nelson Mandela
2. Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going – Rita Mae Brown

**பகுதி - V (மதிப்பெண்கள்:24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்கவும். 3 X 8 = 24**

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும், புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

**(அல்லது)**

ஆ) நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

**(அல்லது)**

ஆ) மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

45. அ) 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்: என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com